**சார்பு நீதிமன்றம், கீரனூர்**
**முன்னிலை – திரு. C. ராஜேஷ்,** B.A., B.L.,
**சார்பு நீதிபதி, கீரனூர்**

2024–ம் ஆண்டு ஜுலை திங்கள் 16 ம் நாள் செவ்வாய் கிழமை
2055 திருவள்ளுவராண்டு, குரோதி வருடம், ஆனித் திங்கள் 32 ம் நாள்

I.A.No.2/2023 IN O.S.No.47/2022

மாமுண்டி, ... மனுதாரர் / வாதி

– எதிர் –

1. ரெங்கக் கோனார்,
2. பழனியாண்டிக் கோனார்,
3. கோவிந்தம்மாள்,
4. நல்லுச்சாமி,
5. மாரியப்பன், ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது, இறுதி விசாரணைக்காக கடந்த 25.06.2024 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. அழகேசன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.M. அழகன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், மனு, எதிருரை பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும். .

**உத்தரவு**

அசல் வழக்கு சொத்துக்களின் பூஸ்திதி அமைப்பையும், நிலவியல் தோற்றத்தையும் விளக்கும் வகையில் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் பார்வையிட்டு விரிவான வரைபடத்துடன் கூடிய அறிக்கை சமர்ப்பிக்க தக்க உத்தரவிடவேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் :**

1. மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா 1 வது அயிட்ட சொத்தில் உள்ள



C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.07.16 16:37:44 +0530

மனுதாரரின் பாசன வசதியுரிமையை பிரகடனம் செய்யக்கோரியும், தாவா 2 வது அயிட்டச் சொத்தான, பிரதிவாதிகளின் சொத்தின் ஊடே அதன் அடியில் புதைக்கப்பட்டு, முதல் அயிட்டச் சொத்திற்கான பாசன ஆதாரமாக உள்ள பைப் லயனை பிரதிவாதியோ, அவர்தன் ஆட்களோ எந்த காலத்திலும் உடைத்து அழித்துவிடாமல் இருக்கும் வகையில் நிரந்தரத்தடையாணை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து திருநல்லூர் கிராமம், சாலைக் களத்தில் உள்ளது. தாவா 2 வது அயிட்டச் சொத்து என்பது திருநல்லூர் கிராம புஞ்சை புல எண் 242/1B–ல் மனுதாரரால் போடப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து, பிரதிவாதிகளின் சொத்தின் ஊடே 3 அடி ஆழத்திற்கு சுமார் 8000 அடி நீளத்திற்கு, மனுதாரரர் மற்றொரு சொத்தான புல எண் 235/3B–ல் உள்ள கேணி வரை புதைக்கப்பட்டு நீர்ப்பாசனம் வழங்கி வரும் 3 இன்ச் பைப் ஆகும். மேற்படி பைப் லயன், மனுதாரரால் மனுதாரரின் போர்வெல்லிலிருந்து தண்ணீர் இறைத்து, மனுதாரருக்கு சொந்தமான கேணிக்கு கொண்டு போகப்பட்டு அங்கிருந்து மனுதாரரின் நிலங்களுக்கு பாசனம் செய்யப்பட்டு வரப்படுகிறது.

2. மேற்படி பாசனக்குழாய் பிரதிவாதிகளின் சொத்தான புல எண் 232/2C, 290/4C, 235/3A, 233/2, 263/4A2 ஆகிய சொத்துக்களின் ஊடே பூமியில் 3 அடி ஆழத்தில் பிரதிவாதிகளின் சம்மதத்துடன் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக போடப்பட்டு மனுதாரரின் நிலத்திற்கு பாசன ஆதாரமாக இருந்து வருகிறது. பிரதிவாதிகள் உறவினர்கள் என்ற வகையில் ஒருவருக்கொருவர் அவரவர் சொத்தின் ஊடே சென்று வரவும், பாதை பாத்தியம் ஏற்படுத்திக் கொள்ளவும், நீர்ப்பாசனத்திற்கான குழாய் பதித்து தண்ணீர் கொண்டு சென்று விவசாயம் செய்து வருவதுமாக இருந்து வருகிறோம். இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மனுதாரர் மீதுள்ள கருத்து வேறுபாடு காரணமாக நீர்ப்பாசன குழாயை உடைத்து அப்புறப்படுத்தவும் முயற்சித்தனர். அதனால் விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் மனுதாரர் கூறியுள்ளது போல் நீர்பாசனம் நடைபெறவில்லை என்று உண்மையை மறைத்து கட்சி செய்யப்பட்டுள்ளது.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.07.16 16:37:50 +0530

3. அதனால், தாவா முதல் மற்றும் இரண்டாம் அயிட்டச் சொத்துக்களை நேரில் பார்வையிட்டு பூஸ்திதி அமைப்பையும், அதன் இயற்பியல் தோற்றத்தையும் பொறுத்து விளக்கமாக ஆணையர் அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. பூஸ்திதி அமைப்பை பொறுத்து வாய்மொழி சாட்சியம் அளிக்க முடியாது என்பதால் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மூலம் எளிதாக நீதிமன்றம் அறிந்து கொள்ள முடியும் என்பதாலும், நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் தனது ஆய்வின்போது சர்வே நம்பர் சொத்துக்களை அறிந்து கொள்ளும் வகையில் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர், கிராமக்கணக்குகளோடு ஆஜராகி, நீதிமன்ற ஆணையருக்கு உதவி செய்ய ஏதுவாகவும் தகுந்த உதத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 3, 4, 5 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :</u>**

4. இம்மனு நிலைக்கக்கூடியதல்ல. மனுதாரர் சுமார் 8000 மீட்டருக்கு மிகமிக நீண்ட தொலைவிற்கு குழாய் பதித்துள்ளதாக கூறியுள்ளார். அது உண்மையாக இருக்கும்பட்சத்தில் அதற்கான எந்த தேதியில் குழாய்கள் வாங்கினார்? எந்த கடையில் வாங்கினார்? எவ்வளவு தொகைக்கு வாங்கினார்? 3 அடி ஆழம் என்பது அவ்வளவு தூரத்திற்கு மனிதனால் தோண்டி பதிக்க இயலாது. அதற்கான இயந்திரம் எங்கே வாடகைக்கு எடுக்கப்பட்டது? அதற்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டது? என்பதற்கான கணக்கு வழக்குகள் விபரங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. மேற்படி குழாய்கள் மேற்படி புல எண்ணில் எந்த திசையில் எந்த பகுதியில் பதிக்கப்பட்டுள்ளது என்கிற விபரமும் மனுவிலோ அல்லது வழக்கிலோ சொல்லப்படவில்லை. நீதிமன்ற ஆணையர் வெறும் கண்ணால் அதை கண்டுபிடிக்க முடியாது. கிராம நிர்வாக அலுவலரும் ஆவணங்களை வைத்து கூற முடியாது. 3 அடி ஆழம் தோண்ட வேண்டும் என்றால் அதற்கு இயந்திரத்தின் உதவியால் மட்டுமே முடியும், அதற்கு மனுதாரர் அனுமதி கோரவில்லை.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.07.16 16:37:57 +0530

5. 20 வருட காலமாக தண்ணீர் குழாய் வைத்து பயன்படுத்துவதாக கூறுகிறார். உண்மையில் மனுதாரர் அவர் நிலத்தில் ஆழ்குழாய் அமைத்து 4 ஆண்டுகள் தான் ஆகிறது. மின் இணைப்பு பெற்றும் 4 ஆண்டுகள்தான் ஆகிறது. எதிர்மனுதாரர்கள் ஏழை விவசாயிகள் தாவா 2வது அயிட்ட சொத்தை தங்கள் சாப்பாட்டிற்காக நெல் சாகுபடி செய்துள்ளனர். இந்நிலையில் பிரதிவாதிகளின் சொத்தை இயந்திரத்தின் உதவியோடு 3 அடி ஆழத்திற்கு தோண்டினால் தற்போது விவசாயம் பாதிப்பதோடு மேற்படி நிலங்களை மறுபடியும் விவசாயம் செய்ய இயலாத நிலைக்கு சேதமாகும். மனுதாரர், எதிர்மனுதாரர்கள் மீது பல நீதிமன்றங்களில் உயர் நீதிமன்றம் உட்பட வழக்குகளும், வருவாய் துறை மற்றும் காவல் துறையில் பொய் புகார்களும் கொடுத்து அலைக்கழித்து வருகிறார். பொய்யான விபரங்களை கூறி அசல் வழக்கையும், இம்மனுவினையும் தாக்கல் செய்துள்ளார். எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

**7. இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

8. தாவா வழக்கானது, உரிமை விளம்பல் மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கில் வாதி தரப்பில் ஒரு சாட்சியம் முன்னிடப்பட்டு, கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தாவா சொத்தின் பூஸ்திதி அமைப்பு மற்றும் பைப் லயன் அமைக்கப்பட்டுள்ளதை பொறுத்து பார்வையிட்டு, அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டுமெனக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் எந்த தேதியில் பைப் லயன் அமைத்தார், அந்த பைப் எந்த கடையில் வாங்கப்பட்டது, பைப் லயன் அமைப்பதற்கு எந்த இயந்திரம் எவ்வளவு வாடகைக்கு எடுக்கப்பட்டது என்பது குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டது.



C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.07.16 16:38:03 +0530

9. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டதில் மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி எதிர்மனுதாரர்கள் சொத்துக்களின் வழியாக செல்லக்கூடிய பைப் லயன் குறித்தே இருதரப்பிற்கும் பிரச்சனை உள்ளது என தெளிவாக தெரியவருகின்றது. எதிர்மனுதாரர்கள் சொத்தின் வழியாக தனது சொத்திற்கு பைப் லயன் செல்கிறது என மனுதாரர் தரப்பில் கூறியுள்ளதை எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுத்து கூறப்பட்டுள்ளது. மேலும், பைப் லயன் 3 அடி ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ள நிலையில் அதை இயந்திர உதவி இல்லாமல் தோண்டி பார்க்க முடியாது என எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டது. இருதரப்பிற்கும் பைப் லயன் பொறுத்துதான் பிரச்சனை உள்ள காரணத்தால் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மின் மோட்டாரில் இருந்து செல்லக்கூடிய பைப் லயன் வழியாக தண்ணீரை இயக்கிப்பார்த்தாலே அந்த பைப் லயன் எங்கு ஆரம்பித்து எந்த எந்த இடங்களில் முடிவடைகிறது என தெரிந்துவிடும். இதற்கு கிராம நிர்வாக அலுவலர் உதவியோ, இயந்திர உதவியோ தேவையில்லை. எனவே, சிறு மாறுபாட்டுடன் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

**வழக்கறிஞர் திரு. R. விஜயரகுநாதன், B.A., B.L., என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் இரு தரப்பிற்கும் அறிவிப்பு கொடுத்து இருதரப்பினர் முன்னிலையில் தாவா சொத்துக்களை பார்வையிட்டு, மனுதாரர் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 242/1B ல் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து சர்வே எண் 235/3B ல் உள்ள கிணறுவரை சர்வே எண்கள் 232/2C, 290/4C, 235/3A, 233/2, 263/4A2 ஆகிய சொத்துக்களின் ஊடே செல்கிறதா என்பதை பொறுத்து மின் மோட்டாரை இயக்கி தண்ணீர் வெளியேற்றப்படும் பகுதிகளை வைத்து குறித்துக்கொண்டு அது தொடர்பாக விரிவான அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ.5,000/– நிர்ணயிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் ஊதியத்தை ஆணையரிடம் நேரடியாக செலுத்த உத்தரவிடப்படுகிறது. அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா 05.08.2024.**

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.07.16 16:38:09 +0530

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2024ம் வருடம் ஜுலை மாதம் 16ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.07.16 16:38:15 +0530

சார்பு நீதிபதி,
கீரனூர்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் – இல்லை

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.07.16 16:38:19 +0530

சார்பு நீதிபதி,
கீரனூர்.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.07.16 16:38:22 +0530